"(Under Section 173 BNSS)"

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129813

1. District மாவட்டம் : Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 01/2025 | Date: நாள் 29.01.2025

2. (i) Act சட்டம்: PC (Amendment) Act, 2018 — Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 22.01.2025 & 28.01.2025 — Date to : நாள் வரை 12.00 13.30
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.01.2025 — Time : நேரம் 08.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Motor Vehicle Inspector Office, Valliyoor, Tirunelveli District. 40 Km South.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — Tr.R.Suresh Packiam
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — Tr.Raja Manickam
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24.06.1982 — (d) Nationality : நாட்டினம் INDIAN — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Business — (g) Address : முகவரி Door No.122A, Luther Nagar, Valliyoor, Radhapuram Taluk, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr.Perumal, Motor Vehicle Inspector, O/o Motor Vehicle Inspector, Valliyoor, Tirunelveli District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம், (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 29.01.2025-ம் தேதி காலை 08.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளராகிய E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.R.சுரேஷ் பாக்கியம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரியும் திரு.பெருமாள் என்பவர் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும், புகார் மனுவின்படி ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து, அவர்களின் அனுமதி பெற்று 29.01.2025-ம் தேதி 08.30 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2025 u/s 7(a) of PC (Amendment) Act, 2018 என வழக்கு பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் R.சுரேஷ் பாக்கியம், த/பெ.ராஜமாணிக்கம்,

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..........—........ Rank ..............—..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................—..........................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R.சுரேஷ்பாக்கியம் 29/1/25 [signature] 29/01/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29.01.25 09.15 hr.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் E.MCCLARINE ESKHOL
Rank: நிலை ADSP........No. எண் ......V&AC
Tirunelveli.

**Continuation of Tirunelveli Vigilance and Anti-Corruption Crime No.01/2025:-**

கதவு எண்.122A, லுத்தர் நகர், வள்ளியூர், இராதாபுரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம், செல்.9442259628. பெறுநர் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், திருநெல்வேலி. ஐயா, நான் மேற்கண்ட முகவரில் நிரந்தரமாக வசித்து வருகிறேன். நான் கடந்த 2024-ம் வருடம் மார்ச் மாதம் எனது பெயரில் புதிதாக Innova Hycross வாகனத்தை வாங்கி திருநெல்வேலி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 14.03.2024-ம் தேதி தற்காலிக பதிவு செய்து ஓட்டி வருகிறேன். நான் சில காலம் வெளியூர் சென்ற காரணத்தினால் என்னால் மேற்படி வாகனத்தை நிரந்தர பதிவு செய்து சான்று பெற இயலவில்லை. இந்நிலையில் 22.01.2025-ம் தேதி மேற்படி நான்கு சக்கர வானத்தை நிரந்தர பதிவு செய்ய வேண்டி சண்முகபுரத்தை சேர்ந்த எனது நண்பரான திரு.லாரன்ஸ் என்பவர் உதவியுடன், வாகன பதிவு சான்று கட்டணம், ஆயுள்கால வரி மற்றும் தாமத கட்டணம் என மொத்தம் ரூ.4,35,490/- செலுத்தினேன். அதன்பின்பு 22.01.2025-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் நானும், எனது நண்பர் திரு.லாரன்ஸ் என்பவருடன் சேர்ந்து, வள்ளியூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்களிடம் எனது வாகனத்திற்கான ஆவணங்களை சமர்ப்பித்தேன். எனது வாகனத்தை ஆய்வு செய்த வள்ளியூர் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்கள் நான் சமர்ப்பித்த சில ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு என்னிடம் ரூ.20,000/- (இருபதாயிரம்) பணம் தனக்கு தந்தால் தான் என்னுடைய வாகனத்தை நிரந்தர பதிவு செய்து தருவதாக கூறினார். மேலும் வாகனம் நிரந்தர பதிவு செய்வதற்கு முன்பு ஏதாவது விபத்தில் ஈடுபட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக வாகனத்தை அடுத்த வாரம் மீண்டும் தன்னிடம் கொண்டு காட்ட வேண்டும் என்றும், அப்போது தான் கேட்ட பணத்துடன் வந்து தன்னை பார்க்குமாறும் சொன்னார். அதன்படி நான் (நேற்று) 28.01.2025-ம் தேதி மதியம் சுமார் 1.30 மணியளவில் மேற்படி எனது வாகனத்தை வள்ளியூர் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு கொண்டு சென்று அங்கு பணியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்களை சந்தித்தேன். அவர் எனது வாகனம் ஏதாவது விபத்தில் ஈடுபட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக சோதனை செய்தபின் அவ்வாறு எந்த விபத்திலும் வாகனம் சிக்கவில்லை என்றும், வண்டியில் காணப்பட்ட சிறு ஸ்கிராச்கள் வீட்டில் தற்செயலாக ஏற்பட்டது என்றும் ஒரு சான்று எழுதி தரச்சொன்னார். நான் யோசிக்கவே அவரது அலுவலகத்தில் இருந்த ஒரு பெண்

ஊழியரிடம் அவரே என்னென்ன சங்கதிகள் என்பதை சொல்லி எழுதி கொடுக்க சொல்ல அந்த பெண் ஊழியர் எழுதி தந்ததில் நான் கையொப்பம் செய்து அவரிடம் கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.20,000/- கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்றும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றும் சொன்னேன். அதற்கு அவர் கண்டிப்பாக ரூ.15,000/- பணம் உடனே தந்தால் தான் வாகனத்தை நிரந்தர பதிவு செய்து விடுவிப்பேன் என்று உறுதியாக சொல்லிவிட்டார். நான் வேறு வழியில்லாமல் என்னிடம் அக்கவுண்டில் ரூ.10,000/- மட்டும் தான் உள்ளது என்று சொன்னேன். அதற்கு அவர் அப்படியென்றால் ரூ.10,000/- பணத்தை தான் சொல்லும் எண்ணுக்கு Google Pay-ல் செலுத்துமாறும், மீதி ரூ.5,000/- பணத்தை நாளை வந்து தருமாறும் சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்கள் கூறிய செல்போன் எண்ணான 9962614070-க்கு 28.01.2025-ம் தேதி மதியம் சுமார் 2.00 மணியளவில் ரூ.10,000/- பணத்தை Google Pay செய்துவிட்டு அந்த விபரத்தை அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் இப்போது வண்டியை எடுத்துக் கொண்டு போ, மீதமுள்ள பணம் ரூ.5,000/-ஐ இன்று 29.01.2025-ம் தேதி கண்டிப்பாக கொண்டு வந்து தன்னிடம் தர வேண்டும் என்றும் அப்போது தான் R.C புக்கை ரிலீஸ் செய்வேன் என்றும் சொன்னார். அதற்கு நானும், வேறு வழியின்றி சரி என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். யோசித்து பார்த்ததில், வாகனத்தை நிரந்தர பதிவு செய்யும் அரசு வேலையை செய்வதற்கு நிர்பந்தித்து ரூ.10,000/- வாங்கிவிட்டு மீண்டும் என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.5,000/-ம் கேட்கிறாரே என்று எனது மனம் சங்கடப்பட்டது. எனக்கு மீண்டும் லஞ்சமாக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் அவர்களுக்கு பணம் கொடுக்க விருப்பமில்லை. மேற்படி திரு.பெருமாள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/- வைத்துள்ளேன். என்னிடம் லஞ்சம் கேட்கும் வள்ளியூர், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெருமாள் மீது சட்டபடியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நாள்.29.01.2025 இப்படிக்கு, sd. (R.சுரேஷ் பாக்கியம்) அறிவேன் sd. (தா.லாரன்ஸ் கிருபாகரன்).

Sir, Received this complaint today on 29.01.2025 at 8.00 hrs and conducted confidential enquiry and found prima facie, hence informed the matter to S.P, SR, DVAC, Chennai, obtained permission and I registered a case in Tirunelveli V&AC Cr.No.01/2025 u/s 7(a) of PC (ammendment) Act, 2018 today on

29.1.25 at 08.30 hrs. sd. E.Mcclarine Eskhol, 29.01.2025. ADSP., V&AC,, Tirunelveli.

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

29/1/25

C E. McCLARINE ESKHOL,
ADSP. V&AC
Tirunelveli.